திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம் மு. அப்பாத்துரை ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,98,64,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 29-3-1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப் படிக்கான விதிகளும், ஆணைகளும்

எதுவுமில்லை.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

98. கோரிக்கை எண் 32—பிற்பட்டோர் நலத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1984-85 (தமிழ், ஆங்கிலம்).

99. பிற்பட்டோர் நலத்துறையின் செயல்வினை முறைத் திட்டம், 1984-85 (ஆங்கிலம்.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS